பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
08 04 2025 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- புதுதில்லி வந்துள்ள துபாய் பட்டத்து இளவரசர் Sheikh Hamdan Bin Mohammed-வை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தார்.
- திமுக தேர்தல் அறிக்கையில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 100 ரூபாய் மானியம் வழங்குவதாக அறிவித்ததை மாநில அரசு இதுவரை நிறைவேற்றவில்லை என்று மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.
- தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட பத்து மசோதாக்கள் தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கி உள்ள தீர்ப்பு மாநில உரிமைகளை நிலைநாட்டியுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடப்பு ஆண்டில் ஒரு லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா வெற்றிபெற 239 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

புதுதில்லி வந்துள்ள துபாய் பட்டத்து இளவரசர் Sheikh Hamdan Bin Mohammed-வை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று சந்தித்து பேசினார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேடஸ் நாடுகளுக்கு இடையேயான அரசியல் பொருளாதார தூதரக உறவுகளை மேம்படுத்த துபாய் முக்கிய பங்காற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

துபாய் இளவரசரின் இந்திய வருகை, இந்திய - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே வேரூன்றி உள்ள நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

முன்னதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் ஆகியோர் துபாய் இளவரசர் Sheikh Hamdan Bin Mohammed -வை தனித்தனியாக சந்தித்து பேசினர்.

திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், இளவரசரின் நேர்மறையான சிந்தனைகள் விரிவான ஒத்துழைப்புக்கு வழிவகுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடனான நட்புறவுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வரும் ஆண்டுகளில் இருதரப்புக்கும் இடையேயான பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சித் திட்டங்கள், உற்பத்தி, புதுமை கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ளவும் இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவையில் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட பத்து மசோதாக்களை நிறுத்தி வைத்து தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி மேற்கொண்ட நடவடிக்கை தவறானது, சட்டவிரோதமானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்த வழக்கு மீது இன்று தீர்ப்பு அளித்த நீதிபதிகள் திரு பர்திவாலா, திரு மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, சட்டப்பேரவையில் இரண்டாவது முறையாக ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டால் அந்த மசோதா-வுக்கு தாமாகவோ ஒப்புதல் கிடைக்கப்பெற்று விட்டதாக கருத வேண்டுமென்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

முதலமைச்சரின் ஆலோசனையின்படியே இந்த விஷயத்தில் ஆளுநர் முடிவெடுக்க வேண்டுமென்று எந்த ஒரு நியாயமான காரணமும் இல்லாமல் மசோதாவை நிறுத்தி வைக்கக்கூடாது என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

பேரவையில் ஒரு முறை நிறைவேற்றப்பட்ட மசோதாவில் பெரிய மாற்றங்களுடன் மீண்டும் நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டுமே அதனை நிறுத்தி வைக்கலாம் என்றும், வேறு எந்த முகாந்திரத்திற்காகவும் அதை நிறுத்தி வைக்கக்கூடாது என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் சாசனத்தின் 200-வது பிரிவின்படி எந்த ஒரு மசோதாவையும் ஆளுநர் நிறுத்தி வைக்கக்கூடாது என்றும், தேவைப்பட்டால் முதலமைச்சர் மற்றும் மாநில அமைச்சர்களின் ஆலோசனையைபெற்று முடிவெடுக்கலாம் என்றும் நீதிபதிக் கூறியுள்ளனர்.

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட பத்து மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்தது சட்ட விரோதமானது என்றும், அந்த சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்ததாகவே கருத வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை வரவேற்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதைத் தெரிவித்த முதலமைச்சர், அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநில சட்டமன்றங்களுக்கான உரிமைகளை நிலைநாட்டும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்துள்ளதகாவும் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக ஒரு லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபாய் கடனுதவி நடப்பு நிதி ஆண்டில் வழங்கப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.,

பேரவையில் இன்று தமது மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு பதிலளித்து பேசிய அவர், விவசாயிகளுக்கு ஆன்லைனில் பயிர்க்கடனுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை தருமபுரி மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று கூறினார்,

நிலமற்ற பெண் விவசாய தொழிலாளர்களுக்கு, விவசாய நிலம் வாங்க ஐந்து லட்சம் ரூபாய் வரை கடனுதவி அளிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆயிரம் மகளிருக்கு எலெக்ட்ரிக் ஆட்டோ வாங்குவதற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

விவசாய விளைப் பொருட்களை சேமித்து பதப்படுத்தவும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்யவும் ஏதுவாக கூட்டுறவு கடனுதவி அளிக்கப்படும் என்றும் அமைச்சர் திரு பெரியகருப்பன் கூறினார்.

[]<<<>>>[]

திமுக தேர்தல் அறிக்கையில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 100 ரூபாய் மானியம் வழங்குவதாக அறிவித்ததை மாநில அரசு இதுவரை நிறைவேற்றவில்லை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் பண்ணாரி மாரியம்மன் கோவில் திருவிழாவில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வைப் பொறுத்து சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்து வருவதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) ---- 22 செகண்ட்*

[]<<<>>>[]

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணி நேரத்திற்கு அதே இடத்தில் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - அமுதா )----- 43 செகண்ட்*

[]<<<>>>[]

காஞ்சிபுரம் விளக்கடிகோவில் தெருவில் உள்ள நியாயநிலைக் கடையை இன்று பார்வையிட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன், கருவிழி எந்திர செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் ஆலத்தூரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் மக்கள் நேர்காணல் முகாம் நாளை நடைபெறும் என ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மாசி, பங்குனி மாத உண்டியல் காணிக்கையாக சுமார் மூன்று கோடியே 79 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளது.

[]<<<>>>[]

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே செவ்வாய் ஸ்தலமான வைத்தீஸ்வரன் கோவில் பங்குனி பிரமோற்சவ தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்டத்தில் கோடை வெய்யிலை அடுத்து போக்குவரத்து காவலர்களுக்கு நீர்மோர், பழச்சாறு, குளிர்பானம் உள்ளிட்டவைகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு மகேஸ்வரன் வழங்கினார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டத்தில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த மூன்றரை டன் ரேஷன் அரிசியை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் அருகே ரயில் தண்டவாளத்தை கடக்க முயன்ற எருமை மாடுகள் மீது ரயில் மோதியதில் ஏழு எருமை மாடுகள் பலியானது குறித்து ரயில்வே போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா வெற்றிபெற 239 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதையடுத்து முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் மூன்று விக்கெட் இழப்புக்கு 238 ரன் எடுத்தது.

239 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தற்போது ஆடி வரும் கொல்கத்தா அணி சற்று முன் வரை 12 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு —149 ரன் எடுத்துள்ளது.

பஞ்சாபில் இரவு மணி 7-30-க்கு தொடங்கும் மற்றொரு போட்டியில், சென்னை அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

*End of News*